வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu    ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    23.03.2026 திங்கட்கிழமை    இதழ் : 76    பக்கங்கள் : 08




## மே மாதம் எரிபொருள் விலை தாங்கமுடியாத அளவு உயரும்!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 23

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தீவிரமடைந்து வரும் போர்ச் சூழல் காரணமாக, எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் இலங்கையில் எரிபொருள் விலையை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த அபாயகரமான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வு மற்றும் போர்ச் சூழலால் கப்பல்களுக்கான பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்துள்ளமை இலங்கையின் எரிபொருள் விலையில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் எரிபொருள் பயன்பாட்டைத் தாமாகவே முன்வந்து மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய விலை அதிகரிப்பிற்கு மத்தியிலும், ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாவும், பெற்றோலுக்கு 20 ரூபாவும் அரசாங்கத்தினால் சலுகையாக வழங்கப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நிலைமை சீராகாவிட்டால், மே மாதம் முதலாம் திகதி மேற்கொள்ளப்படவுள்ள விலைத்திருத்தத்தின் போது பாரிய விலை உயர்வு தவிர்க்க முடியாததாகிவிடும் என அமைச்சர் மேலும்

07

## பாண் விலை உயரும்?

கொழும்பு, மார்ச் 23

எரிபொருள் விலை அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள சவால்களைக் கருத்திற் கொண்டு, வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் இன்று தீர்மானிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக எரிபொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளதால், வெதுப்பக தொழில் துறையை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து ஆராய்வதற்காக இன்று விசேட

07

## பஸ் கட்டணம் உயரும்!

கொழும்பு, மார்ச் 23

பஸ் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பான முறையான யோசனை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், இதற்கான முன்மொழிவுகள் உறுதி செய்யப்படும் எனக் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை மாற்றங்கள் பஸ்

07

## யாழ்.விரிவுரையாளர் தயாளினி திலீபனை மகளும் மருமகனும் இணைந்தே கொலை!

### ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவப் பீட விரிவுரையாளரான 54 வயதுடைய தயாளினி திலீபனை அவரது மகளும் மருமகனும் இணைந்தே கொலை செய்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்தது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீட விரிவுரையாளர் தயாளினி திலீபன் கொலை செய்யப்பட்ட சம்பவம் சமூகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கொலையின் பின்னணியில் விடலைக்கால காதல்

07

## இராணுவத்தின் நிலையங்கள் ஊடாக எரிபொருள் விநியோகத்துக்கு எதிர்ப்பு

### தமிழ் எம்.பிக்கள். கடும் விசனம்

கொழும்பு, மார்ச் 23

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இராணுவ முகாம்கள் மற்றும் இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் நிலையங்கள் ஊடாக எரிபொருள் வழங்கும் நடைமுறைக்கு வடகிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கடும் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், இந்த நடைமுறை தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கும் உணர்வுகளுக்கும் முரணானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட

07

## பாடசாலைகளில் கல்வி செயற்பாடு மாற்றமில்லை

கொழும்பு, மார்ச் 23

நாட்டின் தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியிலும், பாடசாலைகள் நடாத்துவதை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என அரசாங்க ஊடகப் பேச்சாளர் அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மாணவர்களின் கல்வித் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் நோக்கில், வாரத்தில் நான்கு

07

## கொள்கலன் போக்குவரத்து கட்டணம் உயர்த்தப்படும்!

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் எரிபொருள் அதிகரிப்பை தொடர்ந்து கொள்கலன் போக்குவரத்து கட்டணத்தை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிப்பதற்கு கொள்கலன் போக்குவரத்து உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கொள்கலன் போக்குவரத்து கட்டணத்தை 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கொள்கலன் போக்குவரத்து கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டிய நிலை

07

## அடுத்த மாதம் தடையின்றி எரிபொருள் விநியோகம்!

கொழும்பு, மார்ச் 23

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நாட்டில் எரிபொருள் விநியோகத்தில் எவ்விதத் தடைகளும் ஏற்படாது என இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருண உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போதைய எரிபொருள் இருப்பு மற்றும் இறக்குமதித் திட்டங்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த மாதம் முழுவதும் தடையின்றி

07

## மின் கட்டண அதிகரிப்பு; விரைவில் இறுதி முடிவு!

கொழும்பு, மார்ச் 23

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக சந்தை நிலவரங்களைக் கருத்திற்கொண்டு மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

07

## சொகுசு பஸ்ஸில் பயணம் செய்தவர் திடீரென மரணம்!

### வவுனியாவில் அதிர்ச்சிச் சம்பவம்

வவுனியா, மார்ச் 23

கொழும்பு - வவுனியா சொகுசு பஸ்ஸில் பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் சொகுசு பஸ்ஸில் குறித்த நபர் பயணம் செய்துள்ளார்.

இதன்போது பஸ் நேற்று அதிகாலை வ.

07

## அரசாங்கத்தின் இயலாமையை மறைக்க எங்கள் மீது சேறு பூச்சு!

### நாமல் ராஜபக்ஷ சாடல்



கொழும்பு, மார்ச் 23

அரசாங்கம் தனது தோல்விகளையும் முறைகேடுகளையும் மறைப்பதற்காக பழைய பொய்களைக் கூறி எதிர்க்கட்சியினர் மீது பழிசுமத்துவதாக பொதுஜன

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

# நாட்டில் நெருக்கடி நிலையை சமாளிப்பதற்கே முன்னுரிமை

## அதன் பின்னரே மாகாண தேர்தல் குறித்து பார்க்கலாம் என்கிறார் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் பிரபா ருவன்

கொழும்பு, மார்ச் 23

நீண்ட காலமாகத் தள்ளிப் போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்துவதை விட, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கே அரசாங்கம் முன்னுரிமை அளிப்பதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதி அமைச்சர் பிரபா ருவன் செனரத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தடையாக உள்ள சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், சர்வதேச ரீதியாக நிலவும் போர்ச் சூழல் மற்றும் உள் நாட்டுப் பிரச்னைகளுக்குத் தீர்வுகண்பதே தற்போதைய அவசரத் தேவை எனச் சுட்டிக் காட்டினார்.

எனினும், தேர்தலை நடத்துவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபா ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதால்,



தேர்தலைப் புறக்கணிப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அவர் நிராகரித்துள்ளார். (அ)

# எரிபொருள் நெருக்கடியினால் தபால் விநியோகத்தில் மாற்றம்

கொழும்பு, மார்ச் 23

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, தபால் விநியோக நடவடிக்கைகளில் மாற்றங்களை மேற்கொள்ள தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் காலங்களில் தபால் பொதி விநியோகங்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் மட்டுமே முன்னெடுக்கப்படும் என பிரதி தபால் மா அதிபர் பிரேமச்சந்திர ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த விநியோகக் கட்டமைப்பு மாற்றத்தின் கீழ், கொழும்பிலிருந்து நெடுந்தூரப் பகுதிகளுக்கான தபால் சேவைகள் வாரத்தின் ஞாயிறு, புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் இடம்பெறவுள்ளன.

குறிப்பாக, கொழும்பிலிருந்து வவுனியா ஊடாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஊடாக யாழ்ப்பாணம், பொலனறுவை ஊடாக மட்டக்களப்பு மற்றும் பதுளை, கண்டி போன்ற முக்கிய நகரங்களுக்கான தபால் விநியோகங்கள் இவ்வாறு மட்டுப்படுத்தப் பட்டுள்ளன.

இதேவேளை, நெடுந்தூரப் பகுதிகளிலிருந்து கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள புறநகர்ப் பகுதிகளுக்கான தபால் விநியோக நடவடிக்கைகளும் இதே அடிப்படையில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நவீன காலத்திற்கு ஏற்றவகையில் வருகிறது புதிய மனநல சட்டமூலம்

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் 1873-ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள காலாவதியான மனநலச் சட்டத்திற்குப் பதிலாக, நவீன காலத்திற்கு ஏற்ற புதிய மனநலச் சட்ட மூலமொன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான வரைபு தற்போது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிதாக முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சட்டமானது, மனநலக் குறைபாடுகளுடைய நபர்களின் உரிமைகள், கண்ணியம் மற்றும் அவர்களின் சுயேச்சையான முடிவெடுக்கும் அதிகாரத்திற்கு முன்னுரிமை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குறிப்பாக, சிகிச்சைக்குச் சம்மதிக்க முடியாத நிலையில் உள்ள நோயாளிகளுக்கு ஆதரவு வழங்கும் கட்டமைப்பு, தேசிய மனநல ஆலோசனைக் குழு மற்றும் மாகாண ரீதியிலான மறுஆய்வு சபைகள் போன்றவற்றை நிறுவுவதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு விசேட மனநல மதிப்பீடுகளைக் கட்டாயமாக்கியுள்ள இந்தச் சட்ட வரைபு, மின் அதிர்வு சிகிச்சை மற்றும் நோயாளிகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற தீவிர சிகிச்சை முறைகளுக்குக் கடுமையான வழிகாட்டல்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

அத்துடன், சிறைக்கைதிகளின் மனநலத்தைப் பாதுகாப்பதற்கான விசேட நடைமுறைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச். 23

மார்ச் மாதத்தின் முதல் 18 நாட்களில் 109,410 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தின் முதல் 18 நாட்களில் 190,536 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்திருந்த நிலையில், இம்மாதம் இந்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு போர்ச் சூழல் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை நிலையில் சரிவு ஏற்பட்டுள்ளதை இந்த புள்ளிவிவரம் எடுத்துக் காட்டுகிறது. (எ)

# அத்தியாவசியப் பொருள்கள் விலைகள் அதிகரிப்பை தடுக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 23

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதைத் தடுக்க அரசாங்கம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இது தொடர்பாக வர்த்தக சமூகத்தினர் மற்றும் இறக்குமதியாளர்களுடன் விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பொருட்களின் விலைகளைத் தன்னிச்சையாக உயர்த்துவதைத் தவிர்க்குமாறு வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதுடன், விலைக் கட்டுப்பாடுகளை விதிப்பதை விட சந்தையில் பொருட்களின் விநியோகத்தைச் சீராகப் பேணுவதன் மூலம் விலைகளை நிலைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக, லங்கா சதொச நிறுவனம் ஊடாக பெருமளவிலான அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

ஈரானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நெத்தலி கருவாடு விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ள போதிலும், அதற்கு மாற்றீடாக மாலைதீவு மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு, பருப்பு மற்றும் வெங்காயம் போன்ற 80 சதவீதத்திற்கும் அதிகமான அத்தியாவசியப் பொருட்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என அமைச்சு உறுதியளித்துள்ளது. (அ)

# எதிர்வரும் ஜூலை மாதம் வரை தேவையான உரம் கையிருப்பில்!

கொழும்பு, மார்ச் 23

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் பதற்றமான சூழலுக்கு மத்தியிலும், எதிர்வரும் ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதிக்குத் தேவையான உரக் கையிருப்பு நாட்டில் உள்ளதாக விவசாய மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் எரிபொருள் விலை அதிகரிப்பால் போக்குவரத்துச் செலவுகள் உயர்ந்துள்ள போதிலும், உள்நாட்டில் உரத் தட்டுப்பாடு ஏற்படாதிருக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யூரியா, மூரியேட் ஒப் பொட்டாஷ் மற்றும் திரி பில் சுப்பர் பொஸ்பேட் போன்ற உர வகைகள் போதியளவு கையிருப்பில் உள்ளதாகவும்,

மேலதிக உரத்தை இறக்குமதி செய்வதற்கான கட்டளைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, விவசாயிகள் தனியார் விற்பனையாளர்களிடம் அதிக விலைக்கு உரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டாமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இருப்பினும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீட சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச விநியோகச் சங்கிலியில் ஏற்படும் இடையூறுகள் இலங்கையின் உணவுப் பாதுகாப்பிற்கு நீண்ட கால அச்சுறுத்தலாக அமையக்கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக, உலகளாவிய உர விநியோகத்தில் மூன்றில் ஒரு பங்கு ஹோர்மூஸ் நீரிணை ஊடாகவே நடைபெறுவதால், அங்கு ஏற்படும் பாதிப்புகள் உர இறக்குமதியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஐந்தாவது வர்த்தக மேல்நீதிமன்றம் இன்று திறந்துவைப்பு

கொழும்பு, மார்ச் 23

நாட்டின் ஐந்தாவது வர்த்தக மேல் நீதிமன்றம் இன்று திங்கள் கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

கொழும்பு அளுத்கடை நீதிமன்ற வளாகத்தில் அமையப் பெற்றுள்ள இந்த புதிய மேல் நீதிமன்றமானது, வர்த்தக ரீதியிலான வழக்குகளை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமைவாக நாட்டில் வர்த்தக வழக்கு விசாரணைகளை முறைப்படுத்துவதற்காக இந்த நீதிமன்றம் நிறுவப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன பதவியேற்றதன் பின்னர் நிறுவப்படும் இரண்டாவது வர்த்தக மேல் நீதிமன்றம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.03.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## வரும் ஆனால் வராது !

மாகாண சபைகளுக்கு எந்த முறையின் கீழ் தேர்தல்களை நடத்துவது என்பதை ஆராய்வதற்காக வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு மூன்று மாத காலத்திற்குள் அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே அதற்குரிய ஆணை என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அந்த தெரிவுக்குழு முதற் தடவையாக கடந்த செவ்வாய்க்கிழமை (17) கூடியபோது தலைவர் ஹேரத் முதலாவது அறிக்கையைத்தான் மூன்று மாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியதாக நம்பகமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது. அவ்வாறானால் மேலும் பல அறிக்கைகளை அவ்வப்போது தெரிவுக்குழு சமர்ப்பிக்கும் என்பதே அதன் அர்த்தமாகும்.

ஆட்சியதிகாரத்துக்கு வந்தால் ஒரு வருடத்திற்குள் மாகாண சபைகளுக்கு தேர்தல்களை நடத்துவதாக 2024 தேசியத் தேர்தல்களின் போது வாக்குறுதி அளித்த தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஒன்றரை வருடங்களாக அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் குறித்து சிந்திக்கவில்லை.

முன்னைய அரசாங்கங்களைப் போன்றே இன்றைய அரசாங்கமும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் காலத்தைக் கடத்திக் கொண்டுபோகும் என்று நிலவும் சந்தேகத்தை “மூன்று மாதங்களில் முதல் அறிக்கை” என்ற வெளியுறவு அமைச்சரின் அறிவிப்பு வலுவடையச் செய்திருக்கிறது.

2024 பாராளுமன்ற தேர்தல்களில் பெற்ற வாக்குகளை விடவும் சுமார் 18 இலட்சம் வாக்குகள் குறைவாகவே 2025 உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியினால் பெறக்கூடியதாக இருந்தது. பாராளுமன்றத் தேர்தல்களைப் போன்றே உள்ளூராட்சி தேர்தல்களிலும் பெரிய வெற்றியைப் பெறக் கூடியதாக இருந்திருக்குமானால், அரசாங்கம் விரைவாகவே மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்தியிருக்கும்.

ஆனால், அதன் மக்கள் ஆதரவில் மேலும் ஒரு பின்டைவை அதுவும் பதவிக்கு வந்து சில மாதங்களுக்குள் சந்திப்பது என்பது அரசாங்கத்துக்கு கட்டுப்படியாகாது. அதனால் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதில் அக்கறை காட்டாமல் இருந்துவந்த அரசாங்கத்துக்கு தேர்தல்களை மேலும் தாமதிப்பதற்கு வாய்ப்பாக கடந்த வருட இறுதியில் டித்வா சூறாவளியும் தற்போது மத்திய கிழக்குப் போரின் விளைவான பொருளாதார நெருக்கடியும் வந்து சேர்ந்தன.

அதனால், அண்மைய எதிர்காலத்தில் குறிப்பாக, இந்த வருடத்திற்குள் தேர்தல்கள் நடத்தப்படக்கூடிய சாத்தியத்தை எதிர்பார்க்க முடியாது என்றே தோன்றுகிறது. போரின் விளைவாக முழு உலகுமே பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், இந்தியாவோ அல்லது வேறு எந்த நாடுமோ மாகாண சபை தேர்தல்களை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தக்கூடிய சாத்தியமும் இல்லை.

ஏப்ரல் 7 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தெரிவுக்குழுவின் கூட்டத்துக்கு சட்டமா அதிபரையும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தையும் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. மேலும் காலத்தைக் கடத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது என்று நம்புவதற்கு எந்தக் காரணமும் கிடையாது.

மாகாண சபை தேர்தல்களை நடத்துவதுடன் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தை வலியுறுத்த மக்களை அணி திரட்டிப் போராட்ட இயக்கத்தை முன்னெடுக்கப் போவதாக இடைக்கிடை அறிக்கை வெளியிடும் தமிழ் தேசியவாதக் கட்சிகளும் பிறகு அதை மறந்துவிடுகின்றன.

மாகாணசபை தேர்தல்களை பற்றி நினைக்கும்போது “வரும் ஆனால்... வராது”. என்ற சினிமா வசனமே ஒன்றே காதில் எதிரொலிக்கிறது.

# இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்

### வீடியோ எடுக்க முயன்ற 4 இலங்கையர்கள் காயம்

டெல்அவிவ், மார்ச். 23

இஸ்ரேலின் டிமோனா நகர் மீது ஈரான் நடத்திய ஏவுகணை தாக்குதல்களை காணொலி எடுக்க முயன்ற நான்கு இலங்கையர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஈரான் ஏவுகணை தாக்குதல்களை நடத்திய போது, பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லாமல் பொது இடத்தில் நின்று, காணொலி எடுத்த போதே இவர்கள் காயமடைந்தனர். இவர்கள் எடுத்த காணொலிகள் சமூக ஊடகங்களிலும் பரவியுள்ளன.

தாக்குதலின் போது அருகில் இருந்த கட்டடங்களின் கண்ணாடிகள் உடைந்து சிதறியதில், அவற்றின் துண்டுகள் இவர்களின் தலை மற்றும் உடலின் பிற பகுதிகளில் குத்தியதாலேயே காயமடைந்தனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

இவர்களின் இத்தகைய செயல் இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரிகளால் வழங்கப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகளை மீறும் செயல் என தூதுவர் சுட்டிக்காட்டினார்.

ஏவுகணை தாக்குதலுக்கு மூன்று நிமிடங்களுக்கு முன்னதாகவே எச்சரிக்கை ஒலி எழுப்பப்படும். அந்த ஒலியைக் கேட்டவுடன் உடனடியாக ஒதுக்கப்பட்ட பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று தஞ்சம் புக வேண்டும். எக்காரணம் கொண்டும் தாக்குதல்களை வேடிக்கை பார்க்கவோ அல்லது காணொலி எடுக்கவோ முயற்சிக்கக் கூடாது என அவர் கூறினார். (எ)

# ஈரானின் 17 மாகாணங்கள் மீது ஒரே நாளில் 640 தாக்குதல்கள்

வாஷிங்டன், மார்ச். 23

ஈரானின் 17 மாகாணங்கள் மீது ஒரே நாளில் 640 தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று அமெரிக்காவை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் ஆர்வலர்களைக் கொண்ட செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்களில் குறைந்தது 68 பேர் உயிரிழந்தனர் என்று அந்த நிறுவனத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் சிறுவர்களா?, பொதுமக்களா? அல்லது இராணுவத்தினரா? என்பது குறித்த வகைப் படுத்தல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் ஆரம்பமாகி மூன்று வாரங்கள் கடந்துள்ள நிலையில், இதுவரை குறைந்தது 1,398 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் 210 சிறுவர்களும் அடங்குவதாக மனித உரிமைகள் ஆர்வலர்களின் செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க மற்றும் இஸ்ரேலியத் தாக்குதல்களால் ஈரானிய இராணுவ அதிகாரிகள் 1,165 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அமெரிக்காவுக்கு ஈரான் கடும் எச்சரிக்கை

தெஹ்ரான், மார்ச். 23

ஹோர்முஸ் நீரிணையை 48 மணிநேரத்துக்குள் திறந்துவிடாவிட்டால், ஈரானின் அனைத்து மின் உற்பத்தி நிலையங்களும் அழிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுத்த எச்சரிக்கைக்கு ஈரான் அரசு தற்போது பதிலடி கொடுத்துள்ளது.

ஈரானின் அரச ஊடகங்களை மேற்கோள் காட்டி பி.பி.சி. செய்தி சேவை வெளியிட்டுள்ள தகவலின்படி, ஈரானின் மின் உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அதற்குப் பதிலாக வளைகுடா பிராந்தியத்தில் உள்ள அமெரிக்காவுடன் தொடர்புடைய அனைத்து எரிசக்தி உட்கட்டமைப்புகளையும் ஈரான் இலக்கு வைக்கும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியின் எச்சரிக்கையைத் தொடர்ந்து ஈரானின் இந்த அறிவிப்பு மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்** ராசிக்குள் சந்திரன் இருப்ப தால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**இடபம்** விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உடல் அசதி சோர்வு வந்து விளக்கம்.

**மிதுனம்** பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல்கள் உதவிகள் கிடைக்கும். புதிய கோணத்தில் யோசித்து பழையபிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சிறப்பான நாள்.

**கடகம்** உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். நீண்டநாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். சாதிக்கும் நாள்.

**சிம்மம்** கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர் பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத் தில் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி** சந்திராஷ்டமம் இருப்பதால் உங்கள் அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள்.

**துலாம்** மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருட்சிகம்** விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள்.

**தனுசு** நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள்.

**மகரம்** பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். பழைய இனிய சம்பவங்கள் அனைத்தும் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்** குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய பிரச்சினைகள் தீரும்.

# பாதையை திறக்கக்கோரி யாழில் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 23

யாழ்ப்பாணம் அன்னசந்திர வீதியில் அமைந்துள்ள ரயில் கடவை ஊடான போக்குவரத்து பாதை மூடப்பட்டுள்ளதை கண்டித்து, குறித்த ரயில் கடவைக்கு முன்பாக நேற்றுக் காலை பொதுமக்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

போக்குவரத்து சிரமங்கள், பொதுமக்களின் அன்றாட வாழ்வில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் உள்ளிட்ட பிரச்னைகளை முன்வைத்து, உடனடி தீர்வு கோரியே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு "வேண்டும் வேண்டும் வீதி வேண்டும், இலகுவான போக்குவரத்தை உறுதி செய், மக்களுக்கு பாதுகாப்பான பாதை வேண்டும், எரிபொருள் பிரச்னையான நேரம் பாதையை மூடாதே" என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ-05)




# நாட்டையும் மக்களையும் அரசாங்கம் பாதுகாக்கும்

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

கொழும்பு, மார்ச். 23

எதிர்க்கட்சியினர் எத்தகைய துரோக செயல்பாடுகளை முன்னெடுத்தாலும் அரசாங்கம் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கும் நேரிய வழியில் தொடர்ந்து பயணிக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இரா. சந்திரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# சவால்கள் மிகுந்த காலத்தில் கட்சியை பாதுகாத்தவர்கள் மகளிர் அணியினர்

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 23

சவால்கள் மிகுந்த காலங்களிலும் சளைக்காமல் வீதிக்கு இறங்கி கட்சியை பாதுகாத்த பெருமைக்குரியவர்கள் எமது மகளிர் அணியினர்.

அந்த நெஞ்சுரமும் மக்களின் நலன் சார்ந்த சிந்தனைகளும் தொடர்ந்தும் புத்துணர்வுடன் முன்னெடுக்கப்பட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாக உள்ளது என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# 1220 லீற்றர் பெற்றோல் கிளிநொச்சியில் மீட்பு

## 24 வயது இளைஞன் கைது

கிளிநொச்சி, மார்ச். 23

கிளிநொச்சி - இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னச்சந்தி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, அனுமதிப்பத்திரமின்றி பெருமளவு எரிபொருளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சனிக்கிழமை இரவு இராமநாதபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போதே சந்தேகநபர் கைது செய்யப் பட்டார்.

இதன்போது, விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 1,220 லீற்றர் பெற்றோல் மற்றும் 530 லீற்றர் டீசல் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞன் ஆவார். (எ)

# "மகா வலியை எதிர்கொள்ளும் தமிழ் மக்கள்"

கொழும்பு, மார்ச். 23

ஒருபுறம் மத்திய கிழக்கு போரின் பொது நெருக்கடியின் ""மகா வலி""யை எதிர்கொண்டவாறே மறுபுறம் அரசின் ""மகா வலி""யையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

டித்வா புயல் அனர்த்தம் நேர்ந்த பொழுது நாங்கள் எதிர்கொண்டது புயலை மட்டுமல்ல, புயலுக்குள்ளும் எங்கள் காணிகளை ஊடறுத்து வேலி போட்ட உங்கள் ""மகா வலி"" யையும்தான் என்று பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

கிளிநொச்சி, மார்ச். 23

கிளிநொச்சி - பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்மன்குண்டு பகுதியில் மின்சாரம் தாக்கி 37 வயது குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

சனிக்கிழமை மாலை பூநகரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இந்த குடும்பஸ்தர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவமனை தரப்பினர் தெரிவித்தனர்.

தனது விவசாய நிலத்தை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக, சட்டவிரோதமான முறையில் அமைத்திருந்த மின்சார வேலியில் மோதியதில், மின்சாரம் தாக்கி இவர் உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினோபெக் மற்றும் லங்கா ஐ. ஓ. சி. எரிபொருள் விலைகளும் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச். 23

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் விலைகளை அதிகரித்ததைத் தொடர்ந்து, சினோபெக் நிறுவனமும் தனது எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ளது.

இதன்படி, சினோபெக் நிறுவனத்தின் ஒக்டேன் 95 பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 122 ரூபாயால் அதிகரிக்கப் பட்டு, அதன் புதிய விலை 487 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலையை 219 ரூபாயால் அதிகரிக்க அந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதன் புதிய விலை 572 ரூபாயாகும்.

இதேவேளை, லங்கா ஐ. ஓ. சி. நிறுவனமும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலைகளுக்கு நிகராக தனது எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டன. இதன்படி, லங்கா ஓட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 79 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 382 ரூபாயாகவும், லங்கா சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 90 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 443 ரூபாயாகவும் மாற்றமடைந்துள்ளது.(எ)

# யுத்தத்தில் அரசாங்கம் நடுநிலையாக இருக்கிறதா?

## கபீர் ஹாசிம் கேள்வி

கொழும்பு, மார்ச். 23

மத்திய கிழக்கு யுத்தத்தில் அரசாங்கம் நடுநிலையாக இருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது.

தற்போதுள்ள நிலையில் அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கையில் சிக்கல் இருக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# ஜனாதிபதி கூறிய கருத்து உண்மையா? இல்லையா?

## பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்- நாமல்



கொழும்பு, மார்ச். 23

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றத்தில் கூறிய விடயங்களின் உண்மைத் தன்மை வெளிப்படுவதற்கு இன்னும் சிறிது காலம் இருக்கிறது. ஈரான் போர்க்கப்பல் தாக்குதலின் பின்னணி வெளிப்படுத் தப்பட்டதைப் போன்று, அமெரிக்க போர் விமானம் குறித்த உண்மையும் வெளிப்படுத்தப்படலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், அரசாங்கத்தின் வேலைத் திட்டம் தொடர்பில் நாம் திருப்தியடைகின்றோமா? இல்லையா? என்பதை மக்கள் வெகுவிரைவில் வெளிப்படுத்துவர். உலகின் அனைத்து நாடுகளும் மத்திய கிழக்கு போர் பதற்றத்துக்கு தயாரான நிலையில், எமது அரசாங்கம் மாத்திரம் எந்தவித முன்னாயத்தங்களையும் மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே ஏனைய நாடுகளை விட அதிக விலையிலேயே இலங்கை, உலக சந்தையில் எரிபொருட்களை கொள்வனவு செய்கிறது.

கடந்த காலங்களில் திருகோணமலையில் எண்ணெய் தாங்கிகளை நிறுவிய போது அதனை எதிர்த்தனர்.

திரவ எரிவாயு திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்ட போது அதனையும் எதிர்த்தனர். காற்றாலை மின்உற்பத்தி திட்டத்துக்கும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி அதனை முற்றாக நிறுத்த செய்தனர். அன்று இந்த வேலைத்திட்டங்களுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்காவிட்டால், இன்று மின்கட்டண அதிகரிப்புக்கான தேவை ஏற்பட்டிருக்காது.- என்றார்.

(எ)

# யானை தாக்கி முதியவர் பலி!

பொலநறுவை, மார்ச். 23

பொலநறுவை - தியபெதும பகுதியில் காட்டு யானை தாக்கியதில் 61 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த முதியவர் மற்றுமொருவருடன் மோட்டார் சைக்கிளில் பேக்குளம் பகுதியில் உள்ள வயலுக்குச் சென்ற போதே காட்டு யானை தாக்கியது. (எ)

# ஓட்டோ கட்டணத்தை அதிகரிக்க கோரிக்கை

கொழும்பு, மார்ச். 23

பெற்றோல் விலையை கருத்தில்கொண்டு, ஓட்டோக்களுக்கான முதலாவது கிலோ மீற்றருக்கான கட்டணத்தை 20 ரூபாயால் அதிகரிக்குமாறு ஓட்டோ சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், தேசிய ஒருங்கிணைந்த ஓட்டோ மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் எல். ரோஹண பெரேரா இதனை தெரிவித்தார்.

"எரிபொருள் விலை மீண்டும் திருத்தப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு எமது சேவைக்கு பெரும் பிரச்னையாகவுள்ளது. எமது சேவையை முன்னெடுக்க எரிபொருள் இல்லை. இதற்கு மேல் அரசாங்கம் விலைகளையும் அதிகரித்துள்ளது. "மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டியது" போன்ற நிலையே இது. ஓட்டோ கட்டணத்தின் முதலாவது கிலோ மீற்றருக்காக 20 ரூபாயை அதிகரிக்குமாறு நாங்கள் முன்மொழிகிறோம். நிலவும் நிலைமை குறித்து தெரிவிப்பதற்காக விரைவில் ஜனாதிபதி செயலகத்துக்கு செல்லவுள்ளோம்". - என்றார். (எ)

# பாரிய நஷ்டத்துடன் இயங்கும் பெற்றோலிய கூட்டுத்தாபனம்

கொழும்பு, மார்ச். 23

பெற்றோலிய கூட்டுத்தாபனம் தற்போதும் பாரிய நஷ்டத்துடனேயே இயங்கி வருகிறது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்புக்கு மத்தியிலும், ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாயையும் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாயையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்காக அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு 20 பில்லியன் ரூபாயைச் செலவிடுகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

(எ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் கிணற்றிலிருந்து உயிருடன் மீட்கப்பட்ட இளம் தாய்

## மூவர் 24 மணித்தியாலத்தில் கைது

மட்டக்களப்பு, மார்ச். 23

மட்டக்களப்பு- நெல்லிக்காடு பகுதியில் உள்ள வயல் வெளி ஒன்றின் பாழடைந்த கிணற்றிலிருந்து பெண்ணொருவர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், அதே கிணற்றிலிருந்து மற்றொரு பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒரு தம்பதியினர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை வவுணதீவில் இருந்து மட்டக்களப்பு நகரத்துக்கு இரண்டரை வயது குழந்தையுடன் சென்ற இளம் தாய் காணாமல் போனார். மறுநாள் வெள்ளிக்கிழமை, அவர் பாழடைந்த கிணற்றில் உயிருக்கு போராடிய நிலையில் மீட்கப்பட்டார். அவருடைய குழந்தை வயல்வெளியில் கைவிடப்பட்ட நிலையில் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், அதே கிணற்றில் அழுகிய நிலையில் மற்றொரு பெண்ணின் சடலமும் மீட்கப் பட்டது.

இந்த நிலையில், வந்தாறுமூலை பகுதியில் உள்ள வீடு ஒன்றை சுற்றிவளைத்த பொலிஸார், 26 வயது பெண்ணை கைது செய்தனர். அவரிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், அவரது கணவர் மற்றும் கணவனின் தம்பி ஆகியோரும் வவுணதீவில் வைத்து கைது செய்யப்பட்டனர். மேலும், கடத்தலுக்கு பயன்படுத்திய ஓட்டோவும் மீட்கப்பட்டது. (எ)

# 90 சதவீத தனியார் பஸ்கள் சேவையிலிருந்து விலகல்

கொழும்பு, மார்ச். 23

தனியார் பேருந்துகளில் சுமார் 90 சதவீதமானவை சேவையிலிருந்து விலகின என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நேற்று முன்தினம் அதிகளவில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டன என்று அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். இதன் காரணமாகவே நேற்றைய தினம் பேருந்துகளை இயக்காதிருக்க பேருந்து உரிமையாளர்கள் தீர்மானித்தனர் என்று அவர் குறிப்பிட்டார்.

புதிய பேருந்து கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னரே பேருந்து சேவைகளை மீண்டும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (எ)

# போதைப்பொருளுடன் 22 வயது இளைஞன் கைது

கொழும்பு, மார்ச். 23

கல்கிஸ்ஸை - படோவிட்ட பகுதியில், சனிக்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, ஒரு கிலோ கிராமுக்கும் அதிகமான ஹேரஸ் ரக போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோ 24 கிராம் ஹேரஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் கல்கிஸ்ஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கல்கிஸ்ஸை பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# விமான எரிபொருள் விலையும் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 23

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்கள் காரணமாக சர்வதேச சந்தையில் வானூர்தி எரிபொருள் விலை அதிரடியாக உயர்ந்துள்ளதால், விமானக் கட்டணங்கள் முந்தைய நிலையை விட இரண்டு மடங்காக அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து துறைமுகங்கள் மற்றும் சிவில் வானூர்தி போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனிதா ருவன் கொடித்துவக்கு கருத்து வெளியிடுகையில்,

சர்வதேச சந்தையில் ஒரு கலன் வானூர்தி எரிபொருளின் விலை 2.25 டொலரிலிருந்து சுமார் 4 டொலராக உயர்ந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை (16) நிலவரப்படி, இலங்கையிடம் 28 நாள்களுக்குத் தேவையான எரிபொருள் இருப்பு காணப்பட்டது. தற்போது சுமார் 21 நாள்களுக்குத் தேவையான இருப்பு உள்ளதாகத் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் தொடக்கத்தில் ஒரு எரிபொருள் கப்பல் வரவுள்ளது. அத்துடன் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் மற்றுமொரு கப்பல் வரவுள்ளதால், விநியோகத் தடைகள் ஏற்படாது என பிரதி அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

சர்வதேச எரிபொருள் நெருக்கடி காணப்பட்ட போதிலும், இலங்கையின் கடல்சார் துறை மற்றும் கப் பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் நடவடிக்கைகள் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. கப்பல்களின் வருகை அட்டவணையில் இது வரை மாற்றங்கள் ஏற்பட வில்லை என பிரதி அமைச்சர் கொடித்துவக்கு சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

# கியூ.ஆர். முறைகேடு: 153 தொலைபேசி இலக்கங்கள் அடையாளம்

கொழும்பு, மார்ச். 23

கியூ. ஆர். குறியீட்டை சட்டவிரோதமான முறையில் தரவிறக்கம் செய்த 153 தொலைபேசி இலக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதே வேளை, எரிபொருள் நுகர்வை கட்டுப்படுத்தும் நோக் கில் அறிமுகப்படுத்தப்பட்ட கியூ. ஆர். குறியீடு முறைமை யில் இது வரை சுமார் 60 இலட் சம் பேர் பதிவு செய்துள்ளனர் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கியூ. ஆர். முறைமையில் பதிவு செய்ய முடியாது எனப் பெறப்பட்ட அனைத்து முறைப்பாடுகளுக்குமான தொழில்நுட்பக் குறைபாடுகள் இதுவரையில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப, எரிபொருள் நுகர்வை இயன்றவரை மட்டுப்படுத்த வேண்டும்.

இதேவேளை, கியூ. ஆர். குறியீட்டை சட்டவிரோதமான முறையில் தரவிறக்கம் செய்த 153 தொலைபேசி இலக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நாடு முழுவதும் சட்டவிரோதமான முறையில் எரிபொருளை சேமித்து வைத்திருந்த பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (எ)

# பழைய கசப்புணர்வுகளை மறந்து நாட்டுக்காக ஒன்றிணைவோம்

கொழும்பு, மார்ச். 23

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கிடையிலான பிளவினால் இரு தரப்புமே தொடர் தோல்விகளை சந்தித்து வருகின்றன. பழைய கசப்புணர்வுகளை மறந்து, நாட்டுக்காக இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டியது அவசியமாகும் என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸநாயக்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னிலையில் வலியுறுத்தினார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கவின் ஜனன தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# விபச்சார விடுதி முற்றுகை: இரண்டு பெண்கள் கைது!

கம்பஹா, மார்ச். 23

கந்தானை நகரில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதியை பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன் போது, விடுதியின் முகாமையாளர் மற்றும் இரண்டு பெண்கள் கைது செய் யப்பட்டனர்.

சனிக்கிழமை இரவு கந்தானை பொலிஸாரால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. நீண்டகாலமாக மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இந்த விபச்சார விடுதி நடத்தப்பட்டு வந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# மின்னல் தாக்கங்கள் ஏற்படும் முன்னெச்சரிக்கை அவசியம்

கொழும்பு, மார்ச். 23

மேல், சப்ரகமுவ மற்றும் தெற்கு மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளிலும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறி யுள்ளது.

இதேவேளை, நாட்டின் ஏனைய பகுதிகளில் பெரும்பாலும் வறட்சியான வானிலை நிலவும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும், காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் சில இடங்களில் பனிமூட்டமான வானிலை நிலவக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிக பலத்த காற்று வீசுக்கள் மற்றும் மின்னல் தாக்கங்கள் ஏற்படும் வாய்ப்பு இருப்பதால், பொது மக்கள் அவற்றால் ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்க்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

குறிப்பாக திறந்த வெளிகளில் தங்குவதை தவிர்ப்பது, மின் னல் தாக்கத்திலிருந்து பாது காப்பு பெறும் நடவடிக்கைகளை கடைப்பிடிப்பது உள்ளிட்ட முன்னெச்சரிக்கைகள் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# 37, 000 மெட்ரிக் தொன் டீசலுடன் 25ஆம் திகதி கப்பல் வருகிறது

கொழும்பு, மார்ச். 23

இம்மாதம் 25ஆம் திகதி 37, 000 மெட்ரிக் தொன் டீசலை ஏற்றிய கப்பலொன்று இலங்கையை வந்தடையவுள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்: “மார்ச் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் 37,000 மெட்ரிக் தொன் பெற்றோலை ஏற்றிய கப்பலொன்று இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. உலக சந்தையில் நிலவும் விலை அதிகரிப்பு இதிலும் உள்வாங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, மார்ச் 25ஆம் திகதி 37, 000 மெட்ரிக் தொன் டீசலை ஏற்றிய கப்பலொன்று வரவுள்ளது.”- என்றார். ஞ(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண் விலை...

கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து, பாண் உள்ளிட்ட அனைத்து வெதுப்பக உற்பத்திப் பொருட்களினதும் திருத்தப்பட்ட புதிய விலைகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளன. (அ)

## பஸ் கட்டணம்...

கட்டணங்களில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அவர் மேலும் விளக்குகையில்-

அண்மையில் டீசல் விலை 22 ரூபாவினால் அதிகரிக்கப்பட்ட போது, தற்போதைய கட்டண நிர்ணய சூத்திரத்தின் படி அதன் தாக்கம் 1.84 வீதமாக மட்டுமே இருந்தது. பொதுவாக இந்தத் தாக்கம் 4 வீதத்தினைத் தாண்டினால் மட்டுமே பஸ் கட்டணங்களில் மாற்றம் செய்யப்படும்.

எரிபொருள் விலை நேற்று முன் தினம் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், ஒட்டுமொத்த பாதிப்பு 4 வீத வரம்பைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாகவே தற்போது கட்டண அதிகரிப்பு தவிர்க்க முடியாததாகியுள்ளது.

கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டாலும், பொதுமக்களுக்கு ஏற்படும் சுமையைக் குறைக்கும் வகையில் முறையான குறைந்தபட்சக் கட்டணம் ஒன்று அமுல்படுத்தப்படும் என பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன இதன்போது உறுதி அளித்தார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் புதிய கட்டண விபரங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## மே மாதம்...

குறிப்பிட்டார்.

அடிக்கடி விலைகளை உயர்த்த அரசாங்கம் விரும்பவில்லை என்றாலும், சர்வதேச நெருக்கடிகளால் இவ்வாறான கடினமான முடிவுகளை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

## யாழ்.விரிவுரையாளர்...

மற்றும் போதைப்பொருள் பழக்கங்கள் இணைந்துள்ளன என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தில் விரிவுரையாளரின் 19 வயது மகளும், அவரது 21 வயது மருமகனும் இணைந்து திட்டமிட்டு கொலை செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி அதிகாலை வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த விரிவுரையாளரை கழுத்து நெரித்து கொலை செய்து, அதே நாளில் அரியாலை தனங்கிளப்பு பற்றைக்காட்டில் சடலத்தை வீசியுள்ளனர்.

கொலையின் பின்னர் வீட்டிலிருந்த நகைகளை எடுத்துச் சென்று அடகு வைத்து பெற்ற பணத்தில் திருகோணமலையில் வீடு வாடகைக்கு எடுத்து, தம்பதியாக குடிபுகுந்துள்ளனர்.

பின்னர் 20ஆம் திகதி பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் 21 ஆம் திகதி சம்பவ இடத்திலிருந்து விரிவுரையாளரின் சடலம் மீட்கப்பட்டது.

விசாரணைகளில் தெரியவந்ததாவது, விரிவுரையாளரின் மகள் முன்னதாகவே அந்த இளைஞருடன் காதல் உறவில் இருந்து, கடந்த ஆண்டு பதிவுத் திருமணம் செய்துள்ளார்.

போதைப்பொருள் பழக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்த அந்த இளைஞனை திருமணம் செய்து வைக்க தாய் மறுத்ததால், மகள் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்துள்ளார்.

திருமணத்திற்குப் பின்னர் தம்பதியருக்கிடையில் அடிக்கடி தகராறு ஏற்பட்டதுடன், மகள் தாயாரின் வீட்டிற்கு திரும்பி வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து விவாகரத்து வழக்கும் தொடரப்பட்டிருந்தது.

அண்மையில் சமூக வலைத்தளங்கள் மூலம் இருவருக்கும் மீண்டும் தொடர்பு ஏற்பட்ட நிலையில், சமரசமாக இணைந்து வாழ திட்டமிட்டுள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக கடந்த 17ஆம் திகதி இரவு இளைஞன் விரிவுரையாளரின் வீட்டுக்குள் மறைமுகமாக நுழைந்து, மகளுடன் இணைந்து கொலை திட்டத்தை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட பின்னர், வீட்டிலிருந்த சி.சி.ரி.வி. சாதனத்தின் டி.வி.ஆர். அகற்றப்பட்டு வழியிலுள்ள நீர்நிலையொன்றில் வீசப்பட்டதாகவும், சடலத்தை புதைக்க முயற்சி தோல்வியடைந்ததால் காட்டுப்பகுதியில் வீசப்பட்டதாகவும் விசாரணையில் வெளிப்பட்டுள்ளது.

இந்நிலையில், விரிவுரையாளரின் மகன் அளித்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் மேற்கொண்ட தொழில்நுட்ப விசாரணைகள் மூலம் சந்தேக நபர்கள் கண்டறியப்பட்டனர்.

ஏ.ரி.எம் அட்டை பயன்பாடு, எரிபொருள் பெற பயன்படுத்தப்பட்ட கியூ.ஆர். குறியீட்டு தகவல்கள் மற்றும் கைபேசி இருப்பிட தகவல்கள் மூலம் அவர்கள் திருகோணமலையில் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதில் முழு விவரங்களும் வெளிச்சத்துக்கு வந்தன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில், கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

## இராணுவத்தின்...

சமூகம் என்ற ரீதியில், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி இன்றும் போராடி வரும் நிலையில், அதே இராணுவக் கட்டமைப்பின் ஊடாக அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வது தமது அரசியல் நிலைப்பாட்டுக்கு முரணானது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இருந்து வவுனியா போன்ற பிற மாவட்டங்களுக்குச் சென்று எரிபொருளைப் பெற்று வருவது தேவையற்ற கால விரயத்தையும், மேலதிக எரிபொருள் செலவையும் ஏற்படுத்துவதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் போது கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களாக,

இராணுவத் தலையீடற்ற, ஒரு ஜனநாயக நிருவாகத்தின் கீழ் எரிபொருள் விநியோகம் அமைய வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பொதுமக்கள் பயன்படுத்தும் சாதாரண எரிபொருள் நிரப்பு நிலையங்களிலேயே விரைவுக்குறி (QR Code) முறைமை ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டை வழங்க அனுமதித்தல்.

உறுப்பினர்கள் தத்தமது சொந்த மாவட்டங்களுக்குள்ளேயே எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் வசதியை உறுதி செய்தல்.

இராணுவத் தலையீடு இன்றி, இலங்கை போக்குவரத்துச் சபை அல்லது ஏனைய அரச நிறுவனங்கள் ஊடாக விநியோகத்தை மேற்கொள்ளல்.

பல்வேறு சமூகங்களின் உணர்வுகளையும் மதிக்கின்ற, நடைமுறைக்குச் சாத்தியமான ஒரு மாற்று வழிமுறையை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அக்கோரிக்கையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## அடுத்த மாதம்...

எரிபொருளை விநியோகிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் இது குறித்து அச்சமடையத் தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் சீராக வழங்கப்படுவதால், நாட்டில் மின் வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அதிகரிக்கக்கூடிய எரிபொருள் தேவையைக் கருத்திற்கொண்டு மேலதிக கையிருப்புகள் தயார் நிலையில் உள்ளன.

அரசாங்கம் மேற்கொண்டு வரும் முறையான திட்டமிடல் காரணமாக, எரிபொருள் வரிசைகள் மீண்டும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

## அரசாங்கத்தின்...

பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவிக்கையில்-

உலக சந்தை விலையை விட ஒரு பீப்பாய்க்கு 45 டொலர் மேலதிகமாகச் செலுத்தி எரிபொருள் கொள்வனவு செய்யப்படுகிறது.

நட்பு நாடுகளுடன் பேசி குறைந்த விலைக்கு எண்ணெய் பெறுவோம் எனக் கூறி மக்களை ஏமாற்றிவிட்டு, தற்போது அதிக விலைக்கு வாங்கி அதன் சுமையை மக்கள் மீது சுமத்துகின்றனர்.

தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்டவே மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் திருட்டுகளை மறைக்கவே எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை அச்சுறுத்தி, பழைய பொய்களை உண்மை என நிரூபிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. பொலிஸ் மா அதிபர் நாட்டுக்காகச் செயலாற்ற வேண்டுமே தவிர, ஒரு அரசியல் கட்சியின் தேவைக்காக அல்ல.

கொழும்பு துறைமுக நகரம் மற்றும் மத்தள விமான நிலையம் ஆகியவற்றின் முழுமையான பயனைப் பெற அரசாங்கம் தவறிவிட்டது. சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்க வரிச்சலுகைகளை வழங்கி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

ராஜபக்ஷக்கள் 18 பில்லியன் டொலர்களை திருடினார்கள் என அரசாங்கம் பொய் கூறுகிறது. 18 பில்லியன் டொலர் திருடப்பட்டதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் திணறுகின்றனர்.

அரசாங்கம் தனது கையாலாகத்தனத்தை மறைக்க எம்மீது சேறு பூசுவதை நிறுத்திவிட்டு, நாட்டின் தற்போதைய சவால்களை எதிர்கொள்ள முன்வர வேண்டும் - என்றார். (அ)

## சொகுசு பஸ்ஸில்...

வுனியாவை அடைந்த நிலையில் அவரது நிலை தொடர்பாக சந்தேகம் அடைந்த பஸ் நடத்துநர் மற்றும் சாரதி ஆகியோர் பஸ்ஸை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் மட்டக்களப்பு கல்முனை பகுதியை சேர்ந்த 55 வயதுடைய அலாவுதீன் என்ற நபரே மரணமடைந்துள்ளார்.

அவர் புத்தளம் பகுதியில் இருந்து குறித்த பஸ்ஸில் ஏறியதாக கூறப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மின் கட்டன...

எனினும், கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களின் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு மின்சாரக் கட்டணத்தை 13 வீதத்தால் அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளது.

இது குறித்த இறுதி முடிவை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஏப்ரல் முதலாம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பங்கேற்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருண, மின்சார உற்பத்திக்கான எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பாரிய சிக்கல் குறித்து விளக்கமளித்தார்,

மார்ச் 24, 25 ஆம் திகதிகளில் வரவிருந்த கச்சா எண்ணெய் கப்பல் வராத காரணத்தால், சுத்திகரிப்பு நிலையத்தை மார்ச் 25 வரை மாத்திரமே இயக்க முடியும். இதனால் மின்சார உற்பத்திக்குத் தேவையான "நெப்தா" மற்றும் "எரி எண்ணெய்" ஆகியவற்றை உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏப்ரல் 12, 13 ஆம் திகதிகளில் எரி எண்ணெய் கப்பல் வரவுள்ள போதிலும், அதுவரை மின்சாரத்தை உற்பத்தி செய்ய அதிக விலை கொண்ட டீசலையே பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனால் இனிவரும் நாள்களில் இரவு நேர மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய டீசல் மாத்திரமே பயன்படுத்தப்படும்.

இந்த நெருக்கடி நிலையைக் கையாள பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் அத்தியாவசியமற்ற மின்விளக்குகளை அணைத்து மின்சாரத்தைச் சேமியுங்கள்,குறிப்பாக வீதிகளில் உள்ள மின்விளக்குகளை அணைப்பதற்கும், தேவையற்ற நுகர்வைக் குறைப்பதற்கும் பொதுமக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார். (அ)

## பாடசாலைகளில்...

நாள்கள் பாடசாலைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நுகர்வைக் குறைக்கும் ஒரு நடவடிக்கையாக, வாரத்தின் புதன்கிழமைகளில் மாத்திரம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மேலும், திட்டமிட்டபடி முதலாம் பாடசாலைத் தவணை ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியுடன் நிறைவடையும் என அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

கடந்த காலங்களில் நிலவிய நிச்சயமற்ற சூழ்நிலைகளால் சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரும் பாதிப்புகளைச் சந்தித்திருந்தனர்.

இதனைக்கருத்திற் கொண்டே, வாரத்தில் குறைந்தது 4 நாள்களாவது பாடசாலைகளை நடாத்த அரசாங்கம் முன்னுரிமை அளிப்பதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## கொள்கலன்...

ஏற்பட்டுள்ளதாக இலங்கை சரக்கு போக்குவரத்து சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தாமதக் கட்டணங்களுடன் ஒப்பிடுகையில், கொள்கலன் போக்குவரத்து கட்டணங்கள் 350 வீதம் முதல் 400 வீதம் வரையான அளவில் அதிகரிக்கக்கூடும் என அந்த சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.


கொள்கலன்களை விடுவிக்கும் செயல்முறைக்கு குறைந்தது 4 முதல் 5 நாட்கள் எடுப்பதாகவும், அக்காலப்பகுதியில் ஒரு நாளைக்கு 15,000 ரூபா வீதம் தாமதக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 4700 லீற்றர் டீசல், 800 லீற்றர் பெற்றோல் பதுக்கி வைத்திருந்தவர் யாழில் கைது!

## குற்றத் தடுப்பு பொலிஸார் அதிரடி நடவடிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 23

ஊரெழு பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தின் களஞ்சியசாலையொன்றில் பதுக்கி வைத்திருந்த பெருமளவு எரிபொருள்கள் யாழ் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இதன்போது 4700 லீற்றர் வரையிலான டீசலும் 800 லீற்றர் பெற்றோலும் 400 லீற்றர் மண்ணெண்ணெயும் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொறுப்பதிகாரி பிறேமதிலக தலைமையிலான குழுவினர் ஊரெழுவில் உள்ள தனியார் பல்பொருள் அங்காடியின் களஞ்சியசாலையில் நேற்று நடத்திய சோதனையின்போது பரல்களில் வைக்கப்பட்டிருந்த குறித்த பெருந்தொகையான எரிபொருள்களை மீட்டனர்.

சம்பவம் தொடர்பில் களஞ்சியசாலையில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளுக்கு பின்னர் கைப்பற்றப்பட்ட எரிபொருள்களுடன் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# யாழ். விரிவுரையாளரின் கொலை; சந்தேக நபர்கள் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட மூத்த விரிவுரையாளரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களான மகள் மற்றும் மருமகன் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பதில் நீதவான் வாசல்தலத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் சந்தேக நபர்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க பதில் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை பூதவுடல் நல்லடக்கம் உள்ளிட்ட இறுதி நிகழ்வுகளை ஊடகவியலாளர்கள், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் ஒளிப்படங்கள் மற்றும் காணொளிகள் எடுக்க ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தடை விதித்திருந்தததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது விரிவுரையாளரின் கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதாகியுள்ள அவரது மகளை தாயாரின் இறுதி நிகழ்வுக்காக நீதிமன்ற அனுமதியுடன் யாழ்ப்பாண பொலிஸார் மயானத்துக்கு அழைத்து வந்திருந்தனர்.

அதன்போது, குறித்த பகுதியில் புகைப்படம் மற்றும் காணொளிகளை எடுக்கவேண்டாம் எனவும் அதனை மீறி எடுப்பவர்களை பொலிஸார் ஊடாக கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என கடுமையாக எச்சரித்து இருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டீசல் ஏற்றிய கப்பல் வருகிறது!

கொழும்பு, மார்ச் 23

எதிர்வரும் 25 ஆம் திகதி 37,000 மெற்றிக் தொன் டீசலை ஏற்றிய கப்பலொன்று இலங்கையை வந்தடையவுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மார்ச் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் 37,000 மெற்றிக் தொன் பெற்றோலை ஏற்றிய கப்பலொன்று இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

உலக சந்தையில் நிலவும் விலை அதிகரிப்பு இதிலும் உள்வாங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, மார்ச் 25ஆம் திகதி 37,000 மெற்றிக் தொன் டீசலை ஏற்றிய கப்பலொன்று வரவுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போதும் பாரிய நட்டத்துடனேயே செயற்பட்டு வருகிறது - என்றார். (அ)

# நெருக்கடி நிலைமையை சமாளிக்க மின்சாரத்தைச் சிக்கனமாக்குங்கள்!

## அரசாங்கம் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 23

எதிர்வரும் மார்ச் 24, 25 திகதிகளில் வரவிருந்த மசகு எண்ணெய் கப்பல் வராததால், இம்மாதம் 25ஆம் திகதி வரை மாத்திரமே சுத்திகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா தெரித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மார்ச் 24, 25 திகதிகளில் வரவிருந்த மசகு எண்ணெய் கப்பல் வராததால், இம்மாதம் 25ஆம் திகதி வரை மாத்திரமே சுத்திகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். இதனால் மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் எண்ணெய் மற்றும் நெப்தா ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படும். இது ஒரு பாரிய பிரச்னையாகும். எதிர்வரும் ஏப்ரல் 12, 13 திகதிகளில் எரிபொருள் கப்பல் ஒன்று வரவுள்ளது, ஆனால் நெப்தா வராது. அதற்குப் பதிலாக டீசலைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். இந்த நெருக்கடியால் இனிவரும் காலங்களில் இரவு நேரங்களில் டீசல் மூலமே மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். எனவே, ஒரு விளக்கையாவது அணைத்து, வீதி விளக்குகளையும் அணைத்து இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு செய்தால் மாத்திரமே எம்மால் நிலைமையைச் சமாளிக்க முடியும். பொது மக்கள் இதில் தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது - என்றார். (அ)

# வடக்கில் உற்பத்திப் பொருள்களுக்குரிய நியாயமான விலை கிடைக்கவேண்டும்!

## ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மார்ச் 23

எந்தவொரு உற்பத்தியாளரினதும் உற்பத்திப் பொருட்களுக்குரிய நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் எனவும், இடைத்தரகர்கள் உழைத்துச் செல்வதற்கு இடமளிக்காமல் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்போதே எமது மாகாணம் முழுமையாகத் தன்னிறைவடைய முடியும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

"வடக்கிற்கான தொழில்துறைகள் மன்றத்தின்" வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் தனியார் விடுதி ஒன்றில் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை, மன்றத்தின் தலைவர் எஸ்.நகுலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விசேட உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஆளுநர், தொழில்துறைகளின் நிலையான அபிவிருத்தியின்றி எமது மாகாணம் வளர்ச்சியடைய முடியாது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் வளர்ச்சி என்பது ஏற்றுமதியை நோக்கியதாக அமைய வேண்டும்.

அதற்கான உந்துதலை நாம் அவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. இதற்கு அரச திணைக்களத் தலைவர்களின் எண்ணங்களில் இன்னமும் மாற்றங்கள் வரவேண்டியிருக்கின்றது. ஆரம்பத்தைக் காட்டிலும் தற்போது சில மாற்றங்கள் காணப்பட்டாலும், இன்னமும் காத்திரமான மாற்றங்களை நான் எதிர்பார்க்கின்றேன்," எனத் தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், "போர் நிறைவடைந்த கடந்த 16 ஆண்டுகளில் எமது மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் வளர்ச்சி அபரிமிதமாக உள்ளது. ஆனால், அரசாங்கம் வழங்கும் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் இன்னமும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர்.

அரசாங்கம் அறிவிக்கும் வட்டிக் குறைந்த கடன் திட்டங்கள் நாடு முழுவதுக்குமானவையாகவும், "முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை" என்ற அடிப்படையிலுமே வழங்கப்படுகின்றன. எமது தொழில்முயற்சியாளர்கள் வங்கிகள் கோரும் ஆவணங்களைத் தயார்செய்வதற்குள் ஏனைய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் அக்கடன்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இதற்குத் தீர்வாக நாம் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றோம். முதலாவதாக, வடக்கு மாகாணத்திற்கெனத் தனியானதொரு கடன் தொகையை ஒதுக்குமாறு கோரவுள்ளோம். இரண்டாவதாக, எமது தொழில்முயற்சியாளர்களுக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரிப்பதற்கு இங்குள்ள பல்கலைக்கழகங்களின் ஊடாக உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளையும் எடுத்துள்ளோம்," என்றார்.

சுற்றுலாத்துறை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்துத் தெரிவித்த ஆளுநர், "எமது மாகாணத்தினதும் நாட்டினதும் பொருளாதாரத்துக்குச் சுற்றுலாவிகள் மிகவும் முக்கியமானவர்கள். வடக்கு மாகாணத்துக்கு இந்தியாவிலிருந்து அதிகளவான சுற்றுலாவிகள் வருகின்றனர்.

அதனை மேலும் அதிகரிப்பதற்காக இந்தியத் துணைத் தூதரகத்தின் முழுமையான ஆதரவுடன் சில முன்னெடுப்புகளைச் செய்கின்றோம். கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பயண நேரம் சுற்றுலாவிகளின் வருகையில் பெரும் தாக்கத்தைச் செலுத்துகின்றது.

இதற்குத் தீர்வாக, தற்போதைய அரசாங்கம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ளூர் பயண முனையமொன்றை ஆரம்பிப்பது குறித்துக் கவனம் செலுத்தியுள்ளது. அதேபோல, திருகோணமலைக்கு வரும் சுற்றுலாவிகள் வடக்கை நோக்கி இலகுவாகப் பயணிப்பதற்கு வசதியாக, கொக்கிளாய் - புல்மோட்டைப் பாலம் அமைக்கும் திட்டத்துக்காக, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையும் தயாரிக்கப்பட்டு வருகின்றது" எனவும் ஆளுநர் தமது உரையில் சுட்டிக்காட்டினார். (அ)

# யாழில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று வடக்கு பகுதியில் நேற்று முன் தினம் வீடொன்றில் இருந்து இறந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் வீடொன்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதை தொடர்ந்து அப் பகுதி மக்கள் குறித்த வீட்டில் வசித்து வந்த நபர் சில நாள்கள் வெளியே நடமாடாத காரணத்தால் குறித்த வீட்டில் வசித்த நபரின் உறவினருக்கு அறிவித்துள்ளனர். உடனடியாக உரிய இடத்திற்கு சென்ற உறவினர்கள் வீட்டினை திறந்து பார்த்தபோது வீட்டில் வசித்த ஆண் சடலமாக காணப்பட்ட நிலையில் மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் முதல் கட்ட விசாரணையில் சடலமாக காணப்பட்டவர் செம்பியன் பற்று வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை செல்வசிங்கம் என தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.